THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Thursday, the 27th August 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, the Deputy Chairman (Thiru G. KRISHNAMOORTHY) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Nationalised Text-books

*11*Q*.—THIRU M. RAJAH IYER and THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether the Government have decided to introduce nationalised text-books in all schools from the next academic year, according to any phased programme; and

(*b*) if so, the details thereof?

அரசுப் பாடப் புத்தகங்கள்

திரு. எம். ராஜா அய்யர், திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அடுத்த பள்ளி ஆண்டிலிருந்து எல்லாப் பள்ளிகளிலும் அரசுப் பாடப் புத்தகங்களைப் படிப்படியாகப் புகுத்துவதென அரசு முடிவு செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: (அ) உம்; (இ)யும்: முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரைக்குமான தமிழ்ப்பாடப் புத்தகங்களையும், நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரைக்குமான ஆங்கிலப் பாடப் புத்தகங்களையும் அரசு முன்னரே வெளியிட்டுள்ளது. அவை கல்வித் துறையால் ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள் அனைத்திலும் பயனில் உள்ளன. தற்போது பாடப்புத்தகச் சங்கம் ஒன்றை அரசு 4—3—70 அன்று பதிவு செய்துள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் பள்ளிகளில் பயன்படுவதற்கான ஒன்பது, பத்தாம் வகுப்புக்கான ஆங்கில தமிழ் பாடப் புத்தகங்களையும், மூன்றும் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரைக்குமான கணிதப் புத்தகங்களையும் வெளியிடும் பணியை மேற்படி சங்கம் மேற்கொண்டுள்ளது. முடிவாக பள்ளிகள், கல்லூரிகளுக்கான பாடப் புத்தகங்கள் அனைத்தையும் அச்சிட்டு வெளியிடும் பணியை இச்சங்கம் இறுதியாக மேற்கொள்ளும்.

[27th August 1970

திரு. எம். ராஜா அய்யர் : துணைத் தலைவர் அவர்களே, இந்த டெக்ஸ்ட்-புக் சொஸைடி மூலமாக 1970-71-க்குப் புத்தகங்கள் வெளி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். புத்தகங்களை எழுதுவது ஒரு புறமிருந்தாலும், அவற்றை அச்சிட்டுப் பிரசுரிப்பதும் வினியோகிப்பதும் முக்கியமான கடமையாக, வேலையாக இருக்கின்றது. இன்னும் பல ஊர்களுக்கு, பல பள்ளிகளுக்கு இந்தப் புத்தகங்கள் போய்ச் சேரவில்லை. ஆகையால் இந்தப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவது மட்டுமல்லாமல், அவற்றை வினியோகிப்பதில் அரசாங்கம் தன்னுடைய பொறுப்பு என்ன என்று கருதுகிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மொத்த வியாபாரி மூலமாகவும் சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் புத்தகங்கள் விற்கப்படுவதினால் பள்ளிகளிலுள்ள ஸ்டூடன்ட்ஸ் கூட்டுறவு ஸ்டோர்ஸுக்கு வேலையில்லாமல் அவற்றை இழுத்து மூடவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. பள்ளிகளுக்கு நேரடியாகப் புத்தகங்கள் ஏன் கிடைக்கவில்லை, அனுப்பப்படவில்லை, என்று ஆராய்ந்து அதில் உள்ள சிக்கலை நீக்க அரசாங்கத்தில் என்ன திட்டம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிற்கு என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற புத்தகங்களை அச்சிட்டு வினியோகிப்பதில் ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் மொத்த வினியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலமாக அந்தந்த மாவட்டம் முழுவதும் பரப்புகிற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மொத்த வினியோகஸ்தர்கள் அவர்களுக்கான சில்லறை வியாபாரிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாகப் பள்ளிகளுக்கு வழங்கும் முறையை மேற்கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் கூறுவதைப்போன்ற இடர்ப்பாடுகள் இருந்தால், அவற்றை நீக்க வேறு பல வழிகள் உண்டென்றால், அவற்றைப் பற்றிச் சிந்தித்து இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு முயற்சிகள் செய்யலாம்.

திரு. சா. கணேசன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் புத்தகங்கள் மொத்த வியாபாரிகளுக்குக்கூட தேவையான அளவுக்குக் கிடைக்கவில்லை என்றால், அவர்களால் நியமிக்கப்படுகின்ற சில்லறை வியாபாரிகள் புத்தகங்களின் விலையை அதிகமாக ஏற்றி இதிலும் கருப்புச் சந்தையை உண்டாக்கியிருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இந்த ஆண்டிற்கான புத்தகங்களில் பத்தில் ஒரு பங்குகூட ஜில்லாக்களுக்கு வந்து சேரவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டதா? அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுகிற பொறுப்பை இந்த ஆண்டு அரசு எடுத்துக்கொண்டதன் காரணமாக எதிர்பாராத இடையூறுகள் இந்த ஆண்டு வந்து சேர்ந்துவிட்டன. எதிர்பார்த்ததைவிட காலத்தாழ்வு அதிகமாக ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் 22-8-70-க்

27th August 1970]

குள்ளாக 90 சதவிகிதப் புத்தகங்கள் அச்சிட்டு வினியோகிக்கப்பட்டுள்ளன. ஜூலை முதல் வாரத்தில் வினியோகிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு மேற்கொண்டிருந்தாலும், இடையில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளினால் தாமதம் ஏற்பட்டுவிட்டது. 4-3-70-ல் தான் டெக்ஸ்ட் புக் சொஸயிட்டி உருவாக்கப்பட்டது. அச்சடிப்பதற்கென்று பல்வேறு நிறுவனங்கள் முன்வந்தாலும், அவற்றில் குறைந்த டெண்டர் எது என்று பார்க்க வேண்டும். அதுவும் ஷ்டேஷனரி அண்டு பிரிண்டிங் ரைடக்டர், வொர்க்ஸ் மானேஜர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் கொடுத்தாலும், அவை சரியாக நிறைவேற்றப்படுமா என்பதையெல்லாம் பார்த்துத்தான் இது கொடுக்கப்பட்டது. தாள் வழங்குவதில் சில இடையூறுகள் வந்தன. இந்திய அரசாங்கத்திடம் அச்சிடும் தாள்களை வழங்கும் பொறுப்பு உள்ளது. 56 லட்சம் புத்தகங்கள் அச்சிட்டுத் தருகிற பொறுப்பை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதற்கு வேண்டிய தாள்களை இந்திய அரசாங்கம் தர வேண்டும். அவர்கள் அப்படிக் கொடுக்கவில்லை. சேஷஸாயி, டிடாகர் கம்பெனிகளுடன் இதுபற்றிப் பேசவேண்டி வந்தது. டிடாகர் போன்ற கம்பெனிகள் தாள்கள் அனுப்புவதற்குத் தயாராக இருந்தாலும், கல்கத்தா, ஏனைய வங்காளப் பகுதிகளில் ஏற்பட்ட தகராறுகளினால், அங்கே ஏற்றுமதி செய்வது தடைப்பட்டு, தாள்கள் இங்கே வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அப்படி அவை பல தடைகளைக் கடந்து இங்கே வந்தபோது இங்கே உள்ள முக்கியமான மிஷின் உடைந்துவிட்டது. வேறு இடத்திற்கு அதை மாற்ற வேண்டுமென்று வரும்போது, அதிலும் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. தனியார் துறை என்றால், அவர்கள் உடனே முடிவெடுத்து நிறைவேற்ற முடியும். அரசாங்கத் துறையில் அப்படி அல்ல. ஒவ்வொரு செலவிற்கும் ஃபைனான்ஸ் கமிட்டி, நிதித்துறை செயலாளர் ஆகியோருடைய கையெழுத்துப் பெறவேண்டியிருப்பதால், அதிலும் பல காலத் தாழ்வுகள் ஏற்பட்டன. அப்படிக் காலத்தாழ்வுகள் ஏற்பட்டதை அறிந்த பிறகு, அந்த ஏற்பாட்டில் அச்சடித்து வருகின்ற புத்தகங்கள் வருகிற போது வரட்டும் என்று சொல்லி, இடையில் பத்து லட்சம் புத்தகங்கள் இந்துப் பத்திரிகை அலுவலகத்தில் அச்சடித்து அவர்கள் இப்போது வழங்கி வருகிறார்கள். அனேகமாக இன்னும் ஓரிரு வாரங்களில் நான்கு முதல் ஆறாவது வகுப்புக்கான கணக்கு முதலிய புத்தகங்கள் வழங்கப்பட்டுவிடும். அடுத்த ஆண்டு காலத்தாழ்வு இல்லாத அளவுக்கு முன் கூட்டியே அரசாங்க அச்சகத்தில் அடித்து வழங்கலாம் என்று நினைக்கிறேன். அரசாங்க அச்சகத்திலும் அவர்கள் பல்வேறு வேலைகளை ஏற்றுக்கொண்டிருப்பதால், அவர்கள் முதலில் இதற்கு மறுத்துவிட்டார்கள். மற்றும் தனியார் துறைக்கும் அரசினர் துறைக்கும் இதில் போட்டியிருப்பதால், அவர்கள் அவ்வளவு ஒத்துழைப்பது போலவும் இல்லை. குறிப்பிட்ட அச்சகங்களுக்குக் கொடுக்கும்போது, எப்படியெப்படி காலத்தாழ்வு செய்ய முடியுமோ, அதைச் செய்து இந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது தவறு என்று காட்டும் அளவிற்கு ஒரு நிலை ஏற்படுமா என்று எதிர்பார்த்து வேலை செய்தார்கள். இதை எல்லாம் கவனத்தில் கொண்டு, எதிர்காலத்தில் இந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு அரசு முயற்சித்து வருகிறது. இந்த ஆண்டு ஏற்பட்ட காலத்தாழ்வு வருந்தத் தக்கதுதான். அதைத் தவிர்க்க அரசு முயலும்.

[27th August 1970

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : சபாநாயகர் அவர்களே, தனியார் துறையில் பல்லாயிரக்கணக்கான பேர் இருந்து புத்தகங்களை அச்சடித்து வெளியிடுகின்ற இந்த முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளும்போது, அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, எதிர்பாராத அல்லது எதிர் பார்த்த பல பிரச்னைகள் தோன்றுவது உண்மை என்றாலும், இந்த முயற்சியில் அத்தனை பேருடைய ஒத்துழைப்பையும் கொண்டு புத்தகங் களைக் காலாகாலத்தில் வெளியிட்டு, படிப்படியாக நிறைவேற்றுவதற் கான முயற்சியை அரசாங்கம் கையாண்டிருக்கலாம். எங்கள் கிராமத் தில் ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புத்தகங்கள் இன்னும் வரவில்லை. செகரெட்டேரியட்டில் கூட சில செகரட்டரிகள் தங்களு டைய பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் வரவில்லை என்று போனில் பேசுவதை நான் கண்டேன். எதிர்காலத்தில் அரசாங்கம் இந்த வேலையைக் காலா காலத்தில் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

4-10 p.m. மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய கருத்தைத்தான் நான் முதலில் குறிப் பிட்டேன். ஜூலைத் திங்கள் முதல் வாரத்தில் எல்லாப் புத்தகங்களும் கிடைத்திருக்க வேண்டும். அதற்குத்தான் முயற்சிகள் எடுத்து திட்ட மிடப்பட்டது. இந்தத் தடைகள் அவ்வப்போது கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டிருந்தால் உடனடியாக ஏற்பாடுகள் செய்திருக்கலாம். இத னால்தான் அரசாங்கமே புதிய மிஷின் ஒன்று அல்லது ஒன்றேகால் கோடி ரூபாய் அளவில் வாங்குவதற்கு முடிவு செய்து, அதைக் கிழக்கு ஜெர்மனியிலிருந்து வரவழைக்க இருக்கிறது. அது வந்து வேலை தொடங்க ஒரு ஆண்டிற்கு மேலாகும் சூழ்நிலை இருக்கிறது. அது வந்துவிட்டால், எல்லாப் புத்தகங்களையும் விரைவாக அச்சடிக்க முயற்சி களை எடுத்துக்கொள்ளலாம். இப்போதுள்ள நிலையில் தனியார் அச்ச கங்களையும் அரசாங்க அச்சகத்தையும் நாம் எதிர்பார்க்க வேண்டிய தாயிற்று. இன்று காலையில்கூட அடுத்த ஆண்டிற்கான ஏற்பாடுகளைப் பற்றி ஆலோசிக்க ஒரு கூட்டம் கூட்டிப் பேசினேன். அரசாங்க அச்ச கத்தில் அச்சுக்கோர்ப்பதைச் செய்துவிட்டு, அச்சடிக்கும் பொறுப்பைப் பெரிய பிரஸ்களில் கொடுக்கலாம் என்றால், அவர்களிடம் பைண்டிங் செய்வதற்கான பிரிவு இல்லை. ஆகையால் இது பற்றியெல்லாம் ஆலோசித்து அடுத்த ஆண்டு காலதாழ்வு இல்லாத வகையில் புத்தகங் களை வெளியிட்டு வினியோகிக்க அரசு முயற்சிக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : துணைத் தலைவர் அவர்களே, பள்ளிகள் திறந்து பல மாதங்களாகியும்கூட பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்ற குறைபாடு பல பெற்றோர்களால் திருச்சியில் என்னிடம் கூறப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலைப் பார்த்தால், பல டிபார்ட்மெண்டுகளில் இந்த ''பைல்''கள் சென்று கையெழுத்தாவதில் காலதாமதம் ஆகிறது என்று தெரிகிறது. இந்த நிலை அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரை வாங்கிக்கொடுப்பதாய் இருக்கிறது. அமைச்சர் சொன்னதைப்போல, ஒரு வாரத்திற்குள் எல்லா ஜில்லாக்களிலும் புத்தகங்கள் கிடைக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுப்பதுடன், அடுத்த ஆண்டு இதைப் போன்ற தாமதங்கள் இல்லாம

27th August 1970]

லிருக்க, அமைச்சரின் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மே மாத முடிவிற்குள்ளாகப் புத்தகங்கள் கிடைக்கத் தீவிர ஏற்பாடு செய்ய அரசாங்கச் சார்பில் உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அதைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இப்போதும் புத்தகங்கள் 'ஏ' 'பி' அதாவது 'அ' 'ஆ' என்ற இரண்டு வகையில், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு பகுதியும், சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு ஒரு பகுதியும் அனுப்பினோம். மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து எல்லாப் பள்ளிகளுக்கும் புத்தகங்கள் போகிற நிலைமை இருக்கின்றது. ஆனால் சென்னைப் பல்கலைக் கழகப் பகுதியில் சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. முதலில் கூறிய படி டிரான்ஸ்போர்ட்டேஷன்—அனுப்புவதில் தகராறு இருக்கிறது. அதனால் இந்தப் புத்தகங்கள் மாணவர்கள் கையில் போய்ச்சேர்ந்து, அதற்குப் பிறகு பாடங்களை ஆரம்பிப்பது என்றால், மிகவும் காலத் தாழ்வு ஏற்படும் என்று கருதி, ஆசிரியர்கள் கைக்கு ஒவ்வொரு புத்தகம் முதலில் கிடைக்கும் அளவில் ஏற்பாடு செய்யச் சொன்னேன். அவர்கள் அதை வைத்து பாடங்களைத் துவங்கட்டும் என்று அந்த ஏற்பாடு செய்யப்பட்டது. அரசாங்க அச்சகத் துறை அமைச்சரிடத்திலும் பேசி மற்ற வேலைகளைவிட இவற்றிற்கு முதல் சலுகை தர வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். அடுத்த ஆண்டு இந்த இடர்ப்பாடுகள் இருக்காது.

THIRU M. RAJAH IYER: Mr. Deputy Chairman, Sir, may I submit, on a point of order, that this is a very important matter ? For many of the suggestions that the hon. members would like to make in order to implement the scheme successfully, the question-time is hardly sufficient. May I submit that under rule 41 of our Rules, you may kindly allot half an hour for the discussion of this question of the difficulties experienced by schools because of the policy of distribution of nationalised text-books ? May I urge that you kindly allot half an hour for discussion of this specific issue so that we may have the satisfaction of putting forth our suggestions and views to the Government in order that this policy may be better implemented ?

DEPUTY CHAIRMAN : May I request the Hon. Minister to just have his say about this ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரை மணி நேர விவாதம் வைத்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. உறுப்பினர்கள் எழுப்பிய கருத்துக்களுக்கு என்னால் முடிந்த அளவு பதில் சொன்னேன். முடியக் கூடியவற்றையும் எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்கு மேலும் உறுப்பினர்கள் வழங்கும் கருத்துக்கள் பயன்படுமானால், அரை மணி நேர விவாதம் வைத்துக் கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை; தலைவர் அவர்கள் அனுமதி அளித்தால், வைத்துக் கொள்ளலாம்.

[27th August 1970

THIRU M. RAJAH IYER : We are extremely thankful to the Hon. Minister.

DEPUTY CHAIRMAN : Half an hour will be allotted for this discussion. On what day we will have the discussion will be announced soon.

Free Education Scheme

*12. Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the Madras Educational Rules have been revised with a view to enforcing the implementation of Free Education Scheme of the Government ; and

(*b*) if so, the details thereof ?

இலவசக் கல்வித் திட்டம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசின் இலவசக் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்துடன் தமிழ் நாடு கல்வி விதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) & (இ) : இல்லை. மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களின் பணி முறைமைகள் குறித்து ஆய்வு செய்ய அமைத்த குழு தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளுக்கான விதிகளையும் ஆணைகளையும் தொகுக்கும் வேலையைச் செய்யும்.

THIRU M. RAJAH IYER : Sir, my question is with reference to the Free Education Scheme and the implementation of the same.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, that is the question for which I gave the answer.

THIRU M. RAJAH IYER : May I know, Sir, whether any difficulty has been experienced in the matter of implementation of this Free Education policy by certain institutions refusing to implement the policy of the Government and whether the Government, in the course of the last year or two, have felt the need for arming themselves with powers to enforce the Free Education policy of the Government, particularly in Colleges, where one or two recalcitrant managements refuse to implement the Free Education policy, because of which there are clashes between the students and the managements ? May I know whether the Government have felt the need for amending the Madras Educational Rules in this respect ? That is what I just want to know.